தமிழ்நாடு சட்டம் XVIII / 1943.

1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசனத் திட்டங்கள் (சரிசெய்தல், மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானம் செய்தல்) சட்டம்.

(1943 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; முதலில் புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் 1943 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.)

தமிழ்நாடு மாநிலத்தில், தனியார் நீர்ப்பாசனத் திட்டங்களை சரிசெய்தல் அல்லது மேம்படுத்துதல், தனியார் நிலங்களில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை கட்டுமானம் செய்தல் மற்றும் அரசிடமிருந்து தனியார் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்குதல் ஆகியவற்றிற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

தனியார் நீர்ப்பாசனத் திட்டங்களைப் சரிசெய்வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு, தனியார் நிலங்களில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை கட்டுமானம் செய்வதற்கு, அரசுப் பாசனத் திட்டங்களிலிருந்து தனியார் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்குவதற்கு மற்றும் மேற்கூறப்பட்ட நேர்வுகளில் அவ்வாறு செய்வதற்கான செலவுத் தொகையை வசூலிப்பதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் அளிப்பது உகந்தது என்பதால்; இது, இதன்மூலம் பின்வருமாறு இயற்றப்படுவதாகுக:–

1. குறுந்தலைப்பு.– (1) இச்சட்டம், 1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசனத் திட்டங்கள் (சரிசெய்தல், மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானம் செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

2. அரசு நீர்ப்பாசனத் திட்டங்களை சரிசெய்தல், மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானம் செய்தல் மற்றும் அரசு நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து நீரை வழங்கும் அதிகாரம்.– மாநில அரசின் கருத்தில், அவ்வாறு செய்வது அவசியமானது அல்லது உகந்தது என்று கருதினால், அது–

(a) அதிக திறனுடன் செயற்படாத தனியார் உடைமையாக்கப்பட்ட ஏதேனும் நீர்ப்பாசனத் திட்டங்களை சரிசெய்வதை செயற்படுத்தலாம் அல்லது செயற்படுத்தச் செய்யலாம்.

(b) தனியார் உடைமையில் எந்தவொரு நீர்ப்பாசனத் திட்டங்களையும் மேம்படுத்தலாம் அல்லது மேம்படுத்தச் செய்யலாம்;

(c) 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் I/1908) வரையறுக்கப்பட்டுள்ளவாறு, ஒரு பண்ணைச் சொத்தில் அமைந்துள்ள நிலத்தில் ஒரு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை கட்டுமானம் செய்யலாம் அல்லது கட்டுமானம் செய்ய செய்விக்கலாம்;

(cc) 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (மைய சட்டம் I/1894) வகைமுறைகளுக்கு இணங்க, 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் I/1908) வரையறுக்கப்பட்டுள்ளவாறு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்ணைச் சொத்துகளில் அமைந்துள்ள நிலங்களில் அல்லது அத்தகைய பண்ணைச் சொத்து அல்லது பண்ணைச் சொத்துகளில் அமைந்துள்ள ஒரு பகுதி நிலத்தில் மற்றும் ரயத்துவாரி நிலங்களில் அமைந்துள்ள பகுதி நிலத்தில் பணி செய்யக் கருதினால், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை கட்டுமானம் செய்யும் நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்டவாறு கையகப்படுத்தலாம் மற்றும் அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களை கட்டுமானம் செய்யலாம் அல்லது கட்டுமானம் செய்ய செய்விக்கலாம்;

(d) அரசு நீர்ப்பாசனத் திட்டம் எதிலிருந்தும் தனியார் வசமுள்ள எந்தவொரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் நீர் வழங்குவதற்கு வகை செய்யலாம்.

3. செலவுத் தொகை மற்றும் கட்டணங்களை வசூலித்தல்.– (1) மாநில அரசு–

(a) 2 ஆம் பிரிவின் (a), (b) அல்லது (c) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கையின் செலவுத் தொகையை முதலில் எதிர்கொள்ளவும்;

(b) கூறப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றிய பிறகு அத்தகைய செலவுத் தொகையை தீர்மானிக்கவும்.

(1–A) 2 ஆம் பிரிவின் (a) மற்றும் (b) கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளில், மாநில அரசானது, (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தொகையை, நில உரிமையாளரிடமிருந்தோ அல்லது எந்தவொரு சட்டம் அல்லது வழக்கத்தின்படி நீர்ப்பாசனப் பணியை சரிசெய்யக் கடமைப்பட்ட பிற நபரிடமிருந்தோ மொத்தமாக வசூலிக்க உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(1–B) 2 ஆம் பிரிவின் (c) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளில்,

(i) நீர்ப்பாசனப் பணியானது, பண்ணைச் சொத்தில் அமைந்துள்ள நிலங்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாக கருதப்பட்டு, (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் நடவடிக்கையின் செலவுத் தொகை தீர்மானிக்கப்பட்டவாறு இருப்பின்;

(ii) நீர்ப்பாசனப் பணியானது, அத்தகைய பண்ணைச் சொத்துகளில் அமைந்துள்ள ஒரு பகுதி நிலங்களுக்கும், இரயத்துவாரிப் பகுதிகளில் உள்ள ஒரு பகுதி நிலங்களுக்கும் பணி செய்வதாக கருதப்பட்டு, (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான செலவுத் தொகையின்அத்தகைய வீதமானது, 'நீர்ப்பாசனப் பணியினால் பெறப்பட்ட பண்ணைச் சொத்து' நிலத்தின் பரப்பளவானது, அப்பணியினால் சேவையாற்றப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பளவைக் கொண்டிருப்பின்,

புதிய நீர்ப்பாசனத் திட்டம் யாருடைய நிலத்தில் கட்டப்பட்டதோ அந்த நில உரிமையாளரிடமிருந்து மாநில அரசு, தொகையை மொத்தமாக வசூலிக்க உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழ் வசூலிக்கத்தக்க தொகையானது, நீர்ப்பாசனப் பணி கட்டுமானத்தின் விளைவாக, நில உரிமையாளரால் பெறப்படக்கூடியவாறு, மாநில அரசால் மதிப்பிடப்பட்ட சராசரி நிகர கூடுதல் ஆண்டு வருமானத்தின் நான்கு விழுக்காட்டில் மூலதனமாக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாக இருக்கக்கூடாது.

(1–C) (a) நீர்ப்பாசனப் பணிகள் முடிந்து ஐந்து பசலி ஆண்டுகள் முடிவடைந்தவுடன், கூறப்பட்ட பசலி ஆண்டுகளில் நீர்ப்பாசனப் பணி கட்டுமானத்தின் விளைவாக, நில உரிமையாளரால் பெறப்பட்ட சராசரி நிகர கூடுதல் ஆண்டு வருமானத்தின் உண்மையான தொகையில் நான்கு விழுக்காட்டில் மூலதனமாக்கப்பட்ட மதிப்பை மாநில அரசு தீர்மானிக்க வேண்டும்.

(b) (a) கூறின்கீழ் தீர்மானிக்கப்பட்ட மதிப்பானது, (1–பி) உட்பிரிவின்கீழ் நில உரிமையாளரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக இருந்தால், வேறுபடும் தொகையானது, அவரிடமிருந்து வசூலிக்கப்படும், மேலும் அத்தகைய மதிப்பு அவரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையை விட குறைவாக இருந்தால், வேறுபடும் தொகையானது அவருக்கு திருப்பித் தரப்படும்.

(1–D) (1–பி) உட்பிரிவின் (ii) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசன பணியானது, நில உரிமையாளரால் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் பராமரிப்பு செலவானது, நில உரிமையாளருக்கும் மாநில அரசுக்கும் இடையே, பணியின் செலவில் பகிர்ந்து கொள்ளப்பட்ட வீதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும்.

(2) 2 ஆம் பிரிவின் (b) மற்றும் (c) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளில், "(1–A) உட்பிரிவு அல்லது (1–B) உட்பிரிவின்கீழ் நடவடிக்கைகளுக்கான செலவுத் தொகையைச் செலுத்த வேண்டிய நபர், 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் I/1908) வரையறுக்கப்பட்டுள்ளவாறு, அவர், ஒரு

சொத்தின் நில உரிமையாளராக இருந்தால், அத்தகைய நடவடிக்கைகளால் பயனடைந்த விவசாயிகளால் செலுத்தப்படக்கூடிய வாடகையை உயர்த்துவதற்காக, கூறப்பட்ட சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (ii) ஆம் கூறின்கீழ் விண்ணப்பிக்க உரிமை பெற்றவர் ஆவார்.

விளக்கம்.– மேற்கூறிய நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படக்கூடிய நீர் வழங்கலை அல்லது மேம்பட்ட நீர் வழங்கலை மறுக்க எந்த விவசாயிக்கும் உரிமை இல்லை.

(2–A) 2 ஆம் பிரிவின் (c) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வில்,–

(a) பண்ணைச் சொத்து மற்றும் ரயத்துவாரி எவையேனுமிருப்பின், அப்பகுதிகளில் அத்தகைய பணிகளிலிருந்து நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டிய பகுதியை நிர்ணயித்தல்; மற்றும்

(b) இரயத்துவாரிப் பகுதிகள் எவையேனுமிருப்பின், அவற்றில் அமைந்துள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசனப் பணிகளிலிருந்து வழங்கப்படும் நீருக்காக, அவர்கள் பொருத்தமெனக் கருதும் வீதங்களில் கட்டணம் வசூலித்து, இச்சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளின்படி குறித்துரைக்கப்படும் அத்தகைய நேரங்களிலும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும் அத்தகைய நபர்களிடமிருந்து கட்டணங்களை வசூலித்தல்,

ஆகியவற்றில் மாநில அரசிற்கு உரிமை உண்டு:

(3) 2 ஆம் பிரிவின் (cc) மற்றும் (d) கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளில், மாநில அரசானது, அதனால் வழங்கப்படும் நீருக்கான கட்டணங்களை அவர்கள் பொருத்தமானதாகக் கருதும் வீதங்களில் வசூலிக்க உரிமை உண்டு, மேலும் அவ்வாறு விதிக்கப்படும் கட்டணங்கள் அத்தகைய நபர்களிடமிருந்து, இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்க குறிப்பிடப்படலாகும் அத்தகைய நேரங்களிலும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

4. எழுத்துப்பூர்வ கேட்பு அறிவிப்பு வழங்குவதன் பேரில் செலுத்தவேண்டிய செலவுத் தொகை மற்றும் கட்டணங்கள்.– (1) 3 ஆம் பிரிவின்கீழ் மாநில அரசால் வசூலிக்கப்படக்கூடிய எந்தவொரு செலவுத் தொகை அல்லது கட்டணமும், அரசால் வழங்கப்பட்ட அத்தகைய எழுத்துப்பூர்வ கேட்பு அறிவிப்பு மற்றும் அதன் விதிமுறைகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட நபருக்கு செலுத்தப்பட வேண்டும்.

(2) அத்தகைய செலவுத் தொகை அல்லது கட்டணம், அது செலுத்தப்பட வேண்டிய தேதியிலிருந்து, அதற்கென மாநில அரசால் அறிவிக்கப்படும் வீதத்தில் வட்டியைக் கொண்டிருக்கும்.

5. நில வருவாய் நிலுவைத் தொகையாக வசூலிக்கத்தக்க செலவுத் தொகை மற்றும் கட்டணங்கள்.– 4 ஆம் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க ஏதேனும் செலவுத் தொகை அல்லது கட்டணமானது–

(a) அது யாரால் செலுத்தப்பட வேண்டுமோ அவரிடமிருந்து நிலவரி நிலுவைத் தொகையைப் போல வசூலிக்கப்படலாம்; மற்றும்

(b) சம்பந்தப்பட்ட நீர்ப்பாசனப் பணியினால் சேவையாற்றப்படும் நிலங்களில் அத்தகைய நபரின் நலன் மீதான பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

6. நுழைதல் மற்றும் ஆய்வு செய்யும் அதிகாரம்.– மாவட்ட ஆட்சியர் அல்லது இதன்பொருட்டு அவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் எவரும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, நியாயமான எல்லா நேரங்களிலும், அதில் அமைந்துள்ள நீர்ப்பாசனப் பணி உட்பட ஏதேனும் நிலத்தில் நுழைந்து ஆய்வு செய்யலாம்.

7. மாநில அரசின் அதிகாரங்களை ஒப்படைத்தல்.– (1) மாநில அரசு, புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் அறிவிக்கை செய்வதன் வாயிலாக, இந்தப் பிரிவு மற்றும் 11 ஆம் பிரிவினால் அவற்றுக்கு வழங்கப்பட்டவை நீங்கலாக, இந்தச் சட்டத்தின்படி, அவற்றின் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நபரெவருக்கும் அல்லது மாநில அரசுக்குக் கீழமைந்த அதிகார அமைப்பு எதற்கும் ஒப்படைக்கலாம் மேலும், அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் எவற்றையும் அதேபோன்று திரும்பப் பெறலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு அதிகாரங்களையும் செலுத்துவது, அத்தகைய கட்டுப்பாடுகள், வரம்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும், மேலும் அறிவிக்கையில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பினால் அல்லது அதிகார அமைப்புகளால் கட்டுப்பாடு மற்றும் சீராய்விற்கு உட்பட்டதாக இருக்கும்.

8. சில நேர்வுகளில் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு அகற்றப்படுதல்.– 2, 3 அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட செயல் எதுவும், 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இறுதியானதாக இருக்கும், மேலும் இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விதிகளில் பிறவாறாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விக்கு உட்படுத்தப்படுவதற்கு பொறுப்பாகாது; அதேபோல் நீதிமன்றம் எதுவும் 2,

3 அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கை அல்லது செயல் பொறுத்தும் தடை ஆணையை பிறப்பித்தலாகாது.

9. சில நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தல்.— (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயல் எதற்காகவும், மாநில அரசின் முன் அனுமதியின்றி, மாநில அரசின் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடர்தல் ஆகாது.

(2) மாநில அரசின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், இந்தச் சட்டத்தாலோ அல்லது அதன்படியோ விதிக்கப்பட்ட கடமைகளை ஆற்றும்போது அல்லது விதிக்கப்பட்ட செயற்பணிகளைப் புரியும்போது, நல்லெண்ணத்தில் அச்செயல் செய்யப்பட்டிருப்பின், அத்தகைய செயல் எதனையும் பொறுத்து உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதிலும் பொறுப்பாகுதல் ஆகாது.

10. சில நடவடிக்கைகளுக்கான வரம்பு.— இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயல் எதனையும் பொறுத்து, அத்தகைய செயலுக்கு எதிராக முறையீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடரப்பட்டாலன்றி, அரசுக்கு எதிராக உரிமை வழக்கு எதுவும் தொடர்தல் ஆகாது மற்றும் மாநில அரசின் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடர்தல் ஆகாது.

11. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.— (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மாநில அரசு விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் மேற்கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு குந்தகமின்றி, அத்தகைய விதிகளானது.—

(a) விதிகளால் ஒழுங்குபடுத்தப்பட இந்த சட்டத்தால் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படும் எந்தவொரு பொருட்பாடு;

(b) இச்சட்டத்தின்கீழ் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை;

(c) 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் I/1908) வரையறுக்கப்பட்டுள்ளவாறு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்ணைச் சொத்துகளுக்கு நீர்ப்பாசன பணி செய்யும் நில உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை தீர்மானித்தல் மற்றும் சரிசெய்தல்;

(d) இச்சட்டத்தில் வகைமுறை எதுவும் இல்லாத அல்லது போதுமான வகைமுறை இல்லாத மற்றும் மாநில அரசின் கருத்துப்படி, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கு வகைமுறை தேவை என்று கருதும் ஏதேனும் பிற பொருட்பாடுகள்,

ஆகியவற்றுக்கு வகைசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்கீழ் செய்யப்படும் அனைத்து விதிகளும், புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில் இச்சட்டத்தில் இயற்றப்பட்டதைப் போன்று செயல்விளைவு பெறுதல் வேண்டும்.

12. இச்சட்டம், பிற செய்சட்டங்களுக்கு மீதூர்ந்து இருத்தல்.— அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் அல்லது செய்சட்டம் எதிலும் அதற்கு முரணாக என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட, எடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட விதிகள், ஆணைகள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் அல்லது மற்றவை செயல் விளைவு கொண்டிருத்தல் வேண்டும்.